# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

**பதில் :** அ) மறுசீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்
ஆ) சமய இயக்கங்கள்
இ) சமூகக் கொள்கை
ஈ) மக்களின் கிளர்ச்சி

2) வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.

**பதில் :** 1. சதாரா
2. நாக்பூர்
3. சம்பல்பூர்
4. பஞ்சாபின் சில பகுதிகள்
5. ஜான்சி

3) வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?

**பதில் :** 1. இந்தியா பொருளாதார ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டதோடு பிரிட்டனின் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை அனுப்பும் ஒரு அனுப்புனராக மாற்றம் பெற்றது.
2. ஒரே நேரத்தில் பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களை கொண்டு சேர்க்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா உருவானது.
3. இந்தியாவுக்கு எவ்வித ஆதாயமுமின்றி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்கு தொடர்ந்து வளங்களை பரிமாற்றம் செய்யும் விதமாக காலனி ஆட்சியின்கீழ் பொருளாதாரம் அமைந்தது.
4. இதுவே வளங்களின் சுரண்டலாக (செல்வச் சுரண்டல்) அறியப்பட்டது.

4) தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.

**பதில் :** 1. அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
2. தன்னாட்சி பகுதி (டொமினியன்) என்ற தகுதியை அடைவது. ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்கு பின்னர் இந்த அரசாட்சி சாராத நிலை வழங்கப்பட்டது.
3. அவர்களின் இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல் சாசன வழிமுறைகளைக் கையாள்வது என்பனவாகும்.

5) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.

**பதில் :** 1. தன்னாட்சி இயக்கமும் அதனையடுத்து மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் மறு இணைப்பு காரணமாக முஸ்லிம்களுடன் புதிய பேச்சுகளுக்கான சாத்தியக்கூறு லக்னோ ஒப்பந்தத்தின்போது ஏற்பட்டது.
2. லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது.
3. இதற்குப் பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.

6) 1857ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும்.
2. கான்பூரில் சுற்றி வளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் ராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்கு தயாராக இல்லாததால் நானா சாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர்.
3. அவர்கள் அலகாபாத்துக்குத் திரும்பிச்செல்ல பாதுகாப்பான வழி அமைக்கப்பட்டது.
4. அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

7) ஆங்கிலேயர்கள் தங்களுடைய எல்லையை விரிவாக்கம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**பதில் :** 1. பிளாசிப் போருக்குப் பிறகு எல்லையை விரிவாக்கும் கொள்கைகளை ஆங்கிலேயர் பின்பற்றினர்.
2. வெகுவிரைவில் இந்திய துணைக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.
3. நில வருவாய், நிர்வாகம், ராணுவம், காவல்துறை, நீதிமுறை மற்றும் ஆட்சி சார்ந்த இதர நிறுவனங்களில் ஆங்கிலேயர் முறையான மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

8) ஃபராசி இயக்கம் யாரால் தொடங்கப்பட்டது?

**பதில் :** 1. ஹாஜி ஷரியத்துல்லா என்பவரால் 1818ஆம் ஆண்டு ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்டது. வங்காளத்தின் கிழக்குப் பகுதிகளில் தொடங்கப்பட்ட இவ்வமைப்பின் உறுப்பினர்களை இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.
2. ஜமீன்தாரர்களுடனும் அடுத்து விவசாயிகள் கிளர்ச்சியை ஒடுக்க முயன்ற ஜமீன்தாரர்களுக்கு சலுகை காட்டிய ஆங்கிலேயருடனும் நேரடி மோதலை மேற்கொள்ள வழிவகுத்தது.

9) காங்கிரஸ் பின்பற்றிய முக்கிய கோரிக்கைகள் யாவை?

**பதில் :** 1. மாகாண மற்றும் மத்திய அளவில் சட்டமேலவைகளை உருவாக்குவது.
2. சட்ட மேலவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
3. ராணுவச் செலவுகளை குறைப்பது.
4. உள்நாட்டு வரிகளைக் குறைப்பது.
5. காவல்துறை சீர்திருத்தங்கள்.

10) தன்னாட்சி இயக்கத்துக்கான ஆங்கிலேயர்களின் பதில் நடவடிக்கை என்னென்ன?

**பதில் :** 1. தன்னாட்சி இயக்கத்துக்கான ஆங்கிலேயர்களின் பதில் நடவடிக்கை நிரந்தர நிலைப்பாட்டில் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் இந்தியர்களை பெரும் எண்ணிக்கையில் இடம்பெறச் செய்ய சீர்திருத்தம் தேவை என்று முதலில் தெரிவிக்கப்பட்டது.
2. சுயராஜ்ஜியத்துக்கான கோரிக்கையை திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் எழுப்பியது பிரபலமானதைத் தொடர்ந்து தலைவர்களை தனிமைப்படுத்தி அவர்களின் செயல்பாடுகளை முடக்கும் அதே பழைய திட்டத்தை ஆங்கிலேய அரசு பயன்படுத்தியது.

11) மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள் குறிப்பு வரைக.

**பதில் :** 1. 1919இல் மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை ஆங்கிலேய அரசு அறிவித்தது. இதன்மூலம் இந்தியா தன்னாட்சி நோக்கி படிப்படியாக முன்னேற உறுதி கூறப்பட்டது.
2. இந்திய தேசியவாதிகள் இடையே இது மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் ஒரு பேரிடியாக தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனைகளுடன் கூடிய ரௌலட் சட்டத்தை அரசு இயற்றியது.

12) இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய நோக்கங்கள் யாவை?

**பதில் :** 1. மாகாண மற்றும் மத்திய அளவில் சட்ட மேலவைகளை உருவாக்குவது
2. சட்ட மேலவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது
3. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது
4. ராணுவச் செலவுகளைக் குறைப்பது
5. உள்நாட்டு வரிகளைக் குறைப்பது
6. நீதி மூலமாக விசாரணையை விரிவு செய்வது
7. காவல் துறை சீர்திருத்தங்கள்
8. வனச்சட்டதை மறுபரிசீலனை செய்தல்
9. ஒரே நேரத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆட்சிப்பணித் தேர்வுகளை நடத்துவது
10. இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால்வரிகளை முடிவுக்கு கொண்டு வருவது.

13) நிலத்தைக் கீழ்க்குத்தகைக்கு விடுவது என்றால் என்ன?

**பதில் :** 1. நிலத்தைக் குத்தகைக்கு விடுவதும், கீழ்க் குத்தகைக்கு விடுவதும் விவசாய உறவுகளை பெரிதும் சிக்கலாக்கியது.
2. ஜமீன்தார் தன்னிடமிருந்த நிலத்தைப் பெரும்பாலும் தன்னைச் சார்ந்திருந்த நிலப்பிரபுக்களுக்கு கீழ்க்குத்தகைக்கு விட்டார்.
3. பதிலுக்கு நிலப்பிரபு விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொடுப்பார். இதனால் விவசாயிகள் மீதான வரிச்சுமை அதிகரித்தது.

14) வாரிசு இழப்புக் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

**பதில் :** 1. சுதேச மன்னர்கள் தனக்குப் பிறகு தன் நாட்டை ஆட்சி செய்ய ஆண்வாரிசு இன்றி இறந்துவிட்டால், அவர்களின் இறப்புக்குப்பிறகு அந்தப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும்.
2. இதுவே வாரிசு இழப்புக் கொள்கையாகும்.
3. சதாரா, ஜான்சி, நாக்பூர், சம்பல்பூர் பஞ்சாபின் சில பகுதிகள் வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலப்பேராசோடு இணைக்கப்பட்டன.

15) பெரும்புரட்சியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட சில தலைவர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. நானா சாகிப்
2. ராணி லட்சுமி பாய்
3. கான் பகதூர்
4. கன்வர்சிங்
5. ஹஸ்ரத் மகால்
6. பசுதூர் ஷா

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 4 x 5 = 20

16) 1857ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

பதில் : **காரணங்கள்:**

**அ) ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:**

1840 மற்றும் 1850களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

**மேலதிகாரக் கொள்கை:**

1. ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள்.
2. உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

**வாரிசு இழப்புக் கொள்கை:**

1. அரசுக்கட்டிலில் அரியணை ஏற தமக்கு பிறந்த ஆண் வாரிசை உருவாக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினால் அந்த ஆட்சியாளரது இறப்பிற்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.
2. சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த பாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டன.

**ஆ) இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:**

1. 1806ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் மதக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும், தடைவிதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்குப் பதிலாக வட்டவடிவிலான தொப்பிகளை அணியுமாறு பணிக்கப்பட்டனர். அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர்.
2. இத்தகைய ஆடைக்கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்துவ மதத்திற்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.
3. அதேபோன்று 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
4. ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.
5. ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது.
6. அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக்குறியிடப்பட்டு அவமதிக்கப் பட்டார்கள்.

**உடனடிக்காரணம்:**

1. புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டா பற்றிய வதந்தியே புரட்சிக்கு உடனடிக் காரணமாகும்.
2. பசு மற்றும் பன்றிக் கொழுப்பினால் தயாரிக்கப்பட்ட பசை இத்தோட்டாக்களில் பயன்படுத்தப்பட்டதாக வதந்தி பரவியது. அத்தோட்டாவினை வாயால் கடிக்க வேண்டியிருந்தது.
3. பசு இந்துக்களுக்கு புனிதமானதாகவும், பன்றி முஸ்லீம் க்கு தடைசெய்யப்பட்ட உணவாகவும் இருந்ததால் சிப்பாய்கள் இவற்றை உபயோகிக்சு மறுத்தனர்.

**பின்விளைவுகள்:**

**அ) இந்தியா ஆங்கில அரசுக் காலனியாக மாறுதல்:**

1858ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி இந்தியா பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடியான ஆட்சியின் கீழ் வந்தது.

**ஆ) நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்:**

1. இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார்.
2. அரசப் பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று உறுதி மொழி கூறப்பட்டது.
3. இந்திய இராணுவத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது.
4. இராணுவத்தில் முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர்.

17) 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

**பதில் : வங்கப்பிரிவினை:**

1. கர்சன் பிரபு 1905ஆம் ஆண்டு வங்கப்பிரிவினையினை நடைமுறைப்படுத்தினார். இது மிகவும் அதிருப்தியினை சம்பாதித்த நிகழ்வாகும்.
2. இந்துக்கள், முஸ்லிம்களிடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.
3. வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப்பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது.
4. வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை, ஒரு மொழி சிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார்.
5. இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.
6. மத அடிப்படையில் வங்காள மக்களை பிரிக்கவேண்டிய பிரிவினைச் செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது.

**பிரிவினைக்கு எதிரான இயக்கம்:**

1. பிரிவினை பற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன.
2. ஆரம்பகாலப் பிரிவினைவாத எதிர்ப்பு பிரச்சாரம் இங்கிலாந்தின் பொதுக்கருத்தை மாற்றும் குறிக்கோளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.
3. அதனால் வேண்டுகோள்கள், செய்திப்பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.
4. விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோதிலும் 1905ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் நாள் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டது.
5. வங்கப் பிரிவினையை தடுக்கத்தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், புதிய யுக்தியாக அந்நியப் பொருட்களை புறக்கணிக்கும் நோக்கத்தோடு சுதேசி இயக்கத்தைத் தொடங்கினர்.
6. முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை.
7. மற்றொரு புறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தை துவங்க ஆதரவாக இருந்தனர்.
8. 1905 அக்டோபர் 16இல் வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையானபோது அந்த நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
9. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள். வங்கானத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன.

18) முண்டா கிளர்ச்சி பற்றி விரிவாக எழுதவும்.

**பதில் :** 1. ராஞ்சியில் இக்கால கட்டத்தில் நடைபெற்ற உலுகுலன் கிளர்ச்சி (பெரிய கலகம்) பழங்குடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதாக அறியப்படுகிறது.
2. பிர்சா முண்டா தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்த உடன் இந்த இயக்கத்துக்கு ஊக்கம் கிடைத்தது. தமக்கு இறைத் தொடர்பு இருப்பதாக கூறிய பிர்சா அண்டவெளியின் அதீத சக்திகளின் மூலமாக முண்டா இன மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்போவதாகவும் பிர்சா மக்களின் அரசை நிறுவப்போவதாகவும் உறுதியளித்தார்.
3. பிர்சா முண்டாவின் பிரபலத்தைப் பயன்படுத்தி மேலும் அதிக எண்ணிக்கையில் பிர்சா இன மக்களை இந்த நோக்கத்திற்காக ஒன்றிணைக்க முண்டா தலைவர்கள் முயன்றனர்.
4. இரவுக் கூட்டங்கள் பல நடத்தப்பட்டு கிளர்ச்சி ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டது.
5. 1889ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளில் அவர்கள் வன்முறையை கையில் எடுத்தனர். கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.
6. கிறித்துவ தூதுக்குழுக்கள் மற்றும் கிறித்துவர்களாக மதம் மாறிய முண்டாக்கள் மீது அம்பு எறிந்து தாக்குதல்கள் நடந்தன. அதன்பின் காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன.
7. அரசு அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். அடுத்த சில மாதங்களுக்கு இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இறுதியாக இந்த கிளர்ச்சி முடக்கப்பட்டது.
8. 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா பின்னர் சிறையில் உயிர்நீத்தார். பழங்குடியினரின் தலைவராக அறியப்பட்ட பிர்சா முண்டா இன்றளவும் பல நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப்படுகிறார்.
9. இந்த முண்டா கிளர்ச்சியை அடுத்து ஆங்கிலேய அரசு பழங்குடியின நிலம் பற்றிய கொள்கையை வகுக்க முனைந்தது. 1908இல் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்டது.

19) 1857 ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் பற்றி விரிவாக விளக்கவும்.(அ) 1857 பெருங்கலகம் தோல்வியடைய காரணங்களை ஆராய்க.

**பதில் :** 1. 1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி முறையாக ஒருங்கிணைக்கப்படவில்லை. சரியாக திட்டமிடப்படவில்லை. அது தானாக நடந்தது.

2. ஆனால் தில்லி முற்றுகையிடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

3. ஒரு சில இந்திய மாநிலங்களைத் தவிர, இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இனவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது.

4. காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும், ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர்.

5. கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கிடைத்தும் அல்லது கிடைக்காமலும் இருந்தனர்.

6. ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

7. மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது.

8. ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்க பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.

9. இந்தியர்களுக்கு போதிய ஆயுதங்கள் கிடைக்கவில்லை.

10. முறையான அமைப்பாற்றல் இல்லை.

11. இந்திய வீரர்களிடையே ஒழுக்கம் இல்லை.

12. உதவியாளர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டனர்.

13. ஆங்கில இராணுவம் கிளர்ச்சியைக் கடுமையாக ஒடுக்கியது.